| | | | | | |
|---|---|---|---|---|---|
| **இறுதி அறிக்கை தாக்கல்** | : | 15.02.2024 | **தீர்வளிக்கப்பட்டது** | : | 20.07.2026 |
| **புலன்கொள்ளப்பட்டது** | : | 20.02.2024 | **விசாரணை காலம்** | : | 2 வருடங்கள் 5 மாதங்கள் |

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, மேட்டூர்

**முன்னிலை:** N. கோபாலகிருஷ்ணன், B.Sc.,B.L., நீதித்துறை நடுவர் எண்.2(மு.கூ.பொ), மேட்டூர்.

**2026 ஆம் வருடம் ஜூலை மாதம் 20-ம் தேதி, திங்கட்கிழமை**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 258/2026**

**CNR No. TNSA180004402024**

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர், கருமலைக்கூடல் காவல் நிலையம். **Cr. No. 15 of 2024 u/s 279, 338 of IPC** **...புகார்தாரர்**

**-எதிர்-**

**தர்சன் (19/2024) த/பெ.சரவணன், நெ.44/6, தெர்மல் நகர், தொட்டில்பட்டி, மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம்.** **..குற்றஞ்சாட்டப்பட்ட நபர்**

இந்த வழக்கில் அரசு தரப்பிற்காக கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் **திருமதி.V.அனுராதா** அவர்களும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.P.சித்தன்** அவர்களும் முன்னிலையாகி, இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலணை செய்து இந்த நீதிமன்றம் வழங்கும்,

## <u>வழக்கு விசாரணை விவரங்கள்</u>

(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு:- R.O.C. No. 814/2020/RG/F1, நாள்: 07.04.2021-ன் படி)

| | | | |
|---|---|---|---|
| i. | குற்றஞ்சாட்டப்பட்டவர் சிறையில் இருந்த காலம் | : | இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் கடந்த 19.01.2024ம் தேதியன்று காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு அன்றே பிணையில் விடுவிக்கப்பட்டார். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| ii. | புகார் / இறுதி அறிக்கை தாக்கல் செய்த தேதி | : | 15.02.2024 | | |
| iii. | வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி | : | பொருந்தாது | | |
| iv. | குற்றவியல் விசாரணை முறைச் சட்டம். பிரிவுகள் 228, 240, 246 மற்றும் 251–ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி<br>(பொருந்துவதை குறிப்பிடவும்) | : | 09.01.2026 | | |
| v. | கு.வி.மு.ச. பிரிவு 317–ஐ போல் வழக்கமாக தாக்கல் செய்யப்படும் மனுக்கள் தவிர, மற்ற குற்றவியல் பல்வகை மனுக்கள் தாக்கல், அதன் முடிவு மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றங்களின் உத்தரவு உள்பட | : | 1.M.P.No.1/2026, Dated:09.01.2026 70(2) CrPC petition filed and recalled.<br>2.M.P.No.2/2026, Dated:09.01.2026 surrender petition filed and accepted.<br>3.CMP No.919/2026, Dated:23.03.2026 294(3) Cr.P.C petition filed and allowed. | | |
| vi. | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட விபரம் | : | | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | | அ.சா.1 | 03.02.2026 | 03.02.2026 |
| | | | அ.சா.2 | 03.02.2026 | 03.02.2026 |
| | | | அ.சா.3 | 03.02.2026 | 03.02.2026 |
| | | | அ.சா.4 | 19.02.2026 | 19.02.2026 |
| | | | அ.சா.5 | 19.02.2026 | 19.02.2026 |
| | | | அ.சா.6 | 19.02.2026 | 19.02.2026 |
| | | | அ.சா.7 | 19.02.2026 | 19.02.2026 |
| | | | அ.சா.8 | 23.03.2026 | 23.03.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | அ.சா.9 | 30.06.2026 | 30.06.2026 |
| vii. | கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)–ன் படி குற்றஞ்சாட்டப்பட்டவர்களை கேள்வி கேட்ட தேதி | : | 02.07.2026 | | |
| viii. | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தலைமறைவான தேதி, பிடிபட்ட / ஆஜரான தேதி (பொருந்துவதை குறிப்பிடவும்) | : | பொருந்தாது | | |
| ix. | மாண்புமிகு மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய இடைக்கால தடை உத்தரவு மற்றும் அதன் முடிவுகள் | : | இல்லை | | |

## தீர்ப்புரை

1. **அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:** இந்த வழக்கில் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கருமலைக்கூடல் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட, கடந்த 15.01.2023ம் தேதி பகல் 12.00 மணியளவில் சாட்சி மயில்சாமி என்பவர் தனது இருசக்கர வாகனமான **TN 52 S 3052 யமாஹா ரே இரு சக்கர வாகனத்தில்** தொட்டில்பட்டியிலிருந்து, சேலம் கேம்ப் மெயின் ரோட்டில், சான்ரோஸ் அருகே, சேலம் கேம்ப் நோக்கி சென்ற போது, அவருக்கு முன்னால் அதே திசையில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தர்சன் அவரது **TN 77 E 6080 என்ற பதிவு எண் கொண்ட Maruthi Alto காரை** வலது பக்க சிக்னல் ஏதும் போடாமல் கவனக்குறைவாக திடீரென ரோட்டின் வலது பக்கம் திருப்பி மயில்சாமி என்பவர் ஓட்டி சென்ற TN 52 S 3052 என்ற பதிவு எண் கொண்ட யமாஹா இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தி கொடுங்காயம் விளைவித்துள்ளார். எனவே, இந்த வழக்கின்

**குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தர்சன்** என்பவர் இந்திய தண்டனை சட்டப் **பிரிவுகள் 279 மற்றும் 338** ஆகிய சட்டப்பிரிவுகளின் கீழ் தண்டனைக்குரிய குற்றச்செயல் செய்துள்ளதாக, மேற்படி **காவல் உதவி ஆய்வாளர் ஈஸ்வரன்** என்பவர் கடந்த **15.02.2024–ஆம்** தேதி இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் ஏற்பட்ட குற்ற வழக்கு இதுவாகும்.

2. இந்த வழக்கில் கடந்த **20.02.2024–ம்** தேதி, எதிரிக்கு எதிரான குற்றங்கள் புலன்கொள்ளப்பட்டு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் பேரில் ஆஜரான எதிரிக்கு **குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 207–ன் படி** வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கடந்த **05.12.2025 ம்** தேதி இலவசமாக வழங்கப்பட்டது.

3. அதன் பின்னர் கடந்த **09.01.2026** தேதி இருதரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்ததில், குற்றஞ்சாட்டப்பட்ட நபர் **இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 279 மற்றும் 338** ஆகியவற்றின் கீழ் குற்றச்செயல்களை செய்துள்ளார் என்று அனுமானிக்க தகுந்த முகாந்திரங்கள் உள்ளதாக கருதி, கீழ்கண்டவாறு குற்றச்சாட்டுக்களின் சாரம்சம் பற்றி படித்துக் காட்டி, விளக்கி கூறி, வினவிய போது, தான் குற்றவாளி அல்ல எனவும், வழக்கை விசாரிக்க விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

4. ஆகவே, அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, இந்த

வழக்கில் அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.9** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

5. **அரசு தரப்பு சாட்சிகள் வாயிலாக அறியப்படும் வழக்கின் விபரம்:**

a) **நிகழ்நிலை புகார்தாரர் சாட்சியம்:** அ.சா.1 மயில்சாமி என்பவர் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பாக மாலை நேரத்தில் இறப்பு காரியத்திற்கு செல்வதற்காக ஸ்கூட்டி இரு சக்கர வாகனத்தில் மேட்டூர் சாலையில் இருந்து தொட்டில்பட்டி சாலையில் சென்ற போது கார் ஒன்று பின்னால் இருந்து வந்து வளையும் போது தன் மீது கார் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், விபத்தின் காரணமாக தனக்கு தலை, அல்லை, இடது கால் ஆகிய பகுதிகளில் காயம் ஏற்பட்டதாகவும், சிகிச்சைக்காக மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும், போலீசாரிடம் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் அளித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

b) **நேரில் பார்த்த சாட்சி:** சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.4 தனது சாட்சியத்தில் கடந்த ஓர் ஆண்டிற்கு முன்பாக மதியம் 12.00 மணிக்கு சென்ரோஸ் பஸ் ஸ்டாப் அருகே தானும் தன் நண்பர் சதீஷ் என்பவருடன் நின்றிருந்த போது தனக்கு முன்பாக கார் ஒன்று சென்று கொண்டிருந்ததாகவும், அப்போது

அ.சா.1 மயில்சாமி யமாஹா இரு சக்கர வாகனத்தில் தொட்டில்பட்டியிலிருந்து சேலம் கேம்ப் நோக்கி சென்ற போது வலது பக்கம் கார் திருப்பிய போது இரு சக்கர வாகனம் பின்னால் வந்த நிலையில் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், கார் ஓட்டுநர் பின்னால் வரும் இரு சக்கர வாகனத்தை பார்க்கவில்லை என்றும் விபத்து கார் ஓட்டுநர் கவனக்குறைவால் ஏற்பட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மற்றொரு சாட்சியான அ.சா.4 சதிஷ் என்பவரும் அவரை ஒத்து இந்த நீதிமன்றத்தில் சாட்சியமளித்துள்ளார்.

c) **பார்வை மகஜர் சாட்சிகள்:** அ.சா.3 பிரகாஷ் கருமலைக்கூடல் போலீசார் சம்பவயித்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள் என்றும், தான் சாட்சி கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.6 குணசேகரன் கடந்த 16.01.2024ம் தேதி காலை 09.30 மணிக்கு கருமலைக்கூடல் போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைந்த வரைபடத்தில் தானும், பிரகாஷ் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

d) **மருத்துவ சிகிச்சை மற்றும் ஆவணங்கள் :** கடந்த 16.01.2024 ம் தேதி இரவு 11.00 மணியளவில் மயில்சாமி என்பவரை அவரது மகன் சிகிச்சைக்காக அழைத்து வந்ததாக அ.சா.9 மருத்துவர் சசிக்குமார்

சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.1 மயில்சாமியை பரிசோதனை செய்ததில் அவருக்கு இடது பக்க தலை மற்றும் முகத்தில் உள்ள Parital, Orbital, Maxillarysinus, Zygomatictrh எலும்புகள் உடைந்திருந்ததாகவும், தலையில் மூளைக்கு மேலே இரத்தகட்டி இருந்தாகவும், இடதுபக்க விலா எலும்புகள் 6 எலும்பு முதல் 8 எலும்பு வரை உடைந்திருந்ததாகவும், நுரையீரலின் உள்ளே காற்று புகுந்து இருந்ததாகவும், இடதுபக்க தலை, இடது பக்க தோளில், இடது பக்க கால் முட்டியில் சிராய்ப்பு காயம் இருந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். 1 முதல் 3 காயங்கள் கொடுங்காயம் என்றும் 4வது காயம் சாதாரண காயம் என்றும் சான்று வழங்கியுள்ளார்.

e) **முதல் தகவல் அறிக்கை:** 16.01.2024ம் தேதி கருமலைக்கூடல் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் பரமசிவம் நிலையப் பொறுப்பில் இருந்த போது மேட்டூர் மற்றும் சேலம் அரசு மருத்துவமனையில் கிடைக்கப்பெற்ற காயத்தகவலின் பேரில் தலைமை காவலர் சேகர் என்பவரை அனுப்பி அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த மயில்சாமி என்பவரிடமிருந்து புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் கருமலைக்கூடல் காவல் நிலைய குற்ற எண்.15/2024, இதச பிரிவுகள் 279, 337 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை அ.சா.7 காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் பரமசிவம் பதிவு செய்துள்ளார்.

f) **சம்பவயிட விசாரணை:** கடந்த 17.01.2024ம் தேதி காலை 6 மணிக்கு

சம்பவ இடமான தொட்டில்பட்டி டூ சேலம் கேம்ப் செல்லும் சான்ரோஸ் பேருந்து நிறுத்தம் அருகே சென்று சாட்சிகள் பிரகாஷ் மற்றும் குணசேகரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரித்துள்ளார்.

g) **எதிரியின் கைது மற்றும் பிணை:** கடந்த 19.01.2024ம் தேதி பகல் 12.00 மணிக்கு புதுசாம்பள்ளி பேருந்து நிறுத்தம் அருகே கைது செய்யப்பட்டு நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். பின்னர் வழக்கு கோப்பை மேல் புலன் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் ஈஸ்வரன் வசம் ஒப்படைத்துள்ளார்.

h) **மோட்டார் வாகன ஆய்வாளார் ஆய்வு:** விபத்தில் ஈடுபட்ட TN 77 E 6080 Alto இளகு ரக வாகனம் மற்றும் TN 52 S 3052 Yamaha இரு சக்கர வாகனம் இரண்டையும் கைப்பற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் வசம் இயந்திரகோளாறு உள்ளதா என ஆய்வு செய்ய ஆய்வாளர் திருமதி.மீனாகுமாரி என்பவர் வசம் ஆய்வுக்கு அனுப்பியுள்ளார்.

i) இறுதியறிக்கை: பின்னர் மருத்துவர் கொடுங்காயம் என சான்று வழங்கியுள்ளார் சட்டப்பிரிவை மாற்றம் செய்து தனது விசாரணையை முடித்து குற்றஞ்சாட்டப்பட்ட நபர் மீது கடந்த 08.02.2024ம் தேதி **இந்திய தண்டனை சட்டப்பிரிவுகள் 279, 338–ன் கீழ்**

குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிக்கு எதிரான அரசுத் தரப்பு சாட்சியங்களில் உள்ள குற்றம்சொல்லும் சூழ்நிலைகள்**

6. மேலும் அதன் பின்னிட்டு அரசுத் தரப்பு சாட்சி விசாரணை அனைத்தும் நிறைவுற்றதைத் தொடர்ந்து, கடந்த 02.07.2026 அன்று, அரசுத் தரப்பு சாட்சிகளால் எதிரிக்கு எதிராகக் முன்னிலைப்படுத்தப்பட்ட குற்றஞ்சாட்டுச் சூழ்நிலைகள் குறித்து எதிரிக்குத் தெளிவாக விளக்கி விவரித்து, படித்துக் காட்டி **குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 313(1)(b)–ன்** கீழ் அவரிடம் வினவப்பட்டது. அதற்கு குற்றஞ்சாட்டப்பட்ட நபர், தன் மீதான குற்றச்சாட்டுகள் அனைத்தையும் முற்றிலும் மறுத்ததுடன், இவ்வழக்கில் தான் பொய்யாகச் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் பதில் அளித்துள்ளார்.

7. மேலும் இந்த வழக்கு **S.T.C. 294 of 2024** என்ற எண்ணில் கோப்பிலெடுக்கப்பட்டு, அரசுத் தரப்பு சாட்சி விசாரணை நடைபெற்று வந்தது. இந்தச் சூழ்நிலையில், மேற்படி வழக்கு இரண்டு வருடங்களுக்கும் மேலாக நடந்து வருவதாலும், சாட்சி விசாரணை விரிவாக நடைபெற்றுள்ளதாலும், நீதியின் நலன் கருதி, இந்த நீதிமன்றம் மேற்கண்டவாறு சுருக்க விசாரணை முறை வழக்கை, அழைப்பாணை விசாரணை முறை வழக்காக **C.C. 258 of 2026** என மாற்றம் செய்து, **குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 260(2)–ன்** கீழ் உத்தரவிட்டுள்ளது.

## சாட்சிய பகுப்பாய்வு மற்றும் முடிவு

8. இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தரப்பில் எந்தவிதமான வாய்மொழி சாட்சியங்களோ அல்லது ஆவணச் சாட்சியங்களோ முன்னிலை படுத்தப்படவில்லை. எனினும், அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் அனைவரையும் கற்று அறிந்த குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர், அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வாய்மொழி மற்றும் ஆவணச் சாட்சிகளை அடிப்படையாகக் கொண்டு விரிவாகக் குறுக்கு விசாரணை செய்துள்ளார். அவ்வாறான குறுக்கு விசாரணையில் வெளிப்பட்ட அம்சங்களையும், அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்களையும், இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்களையும் ஒன்றிணைத்து இந்த நீதிமன்றம் முழுமையாக பரிசீலனை செய்த போது, இவ்வழக்கில் கீழ்க்கண்ட தீர்வு காணப்பட வேண்டிய எழுவினாக்கள் உருவாகின்றன என இந் நீதிமன்றம் கருதுகிறது.

## தீர்வு காணப்பட வேண்டிய எழுவினாக்கள் மற்றும் தீர்வுகள்

9. **எழுவினா எண். 1:** இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தர்ஷன் என்பவர் கடந்த 15.01.2023–ஆம் தேதி, பகல் 12.00 மணிக்கு, தனது TN 77 E 6080 என்ற பதிவு எண் கொண்ட மாருதி ஆல்டோ காரை வலது பக்க சிக்னல் ஏதும் போடாமல் கவனக்குறைவாகத் திடீரென்று ரோட்டின் வலது பக்கம் திருப்பி, மேற்படி மயில்சாமி என்பவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட காரணமாக இருந்தாரா?

a) இந்த வழக்கில் காயம் பட்ட நபரான அ.சா.1 மயில்சாமி தனது சாட்சியத்தில் சம்பவத்தின் போது கார் ஒன்று பின்னால் இருந்து வந்து வளையும் போது, தன் மீது கார் மோதி விபத்து ஏற்பட்டது என்றும் விபத்தின் காரணமாக, தனக்கு தலை, அல்லை, இடது கால் ஆகிய பகுதிகளில் காயம் ஏற்பட்டுச் சிகிச்சை பெற்றதாக சாட்சியம் அளித்துள்ளார்.

b) மேற்படி இந்த சம்பவத்தை நேரில் பார்த்ததாக சேலம் கேம்ப் காந்தி நகர் பகுதியில் சேர்ந்த ராஜி என்பவரின் மகன் அ.சா.4 சதீஷ் என்பவரும், அதே பகுதியை சேர்ந்த மாரியப்பன் என்பவரின் மகன் அ.சா.5 சதீஷ் என்பவரும் சாட்சிகள் இந்த வழக்கில் விசாரணை செய்யப்பட்டுள்ளனர்.

c) மேற்படி அ.சா.4 சதீஷ் என்பவர் சம்பவத்தின் போது சேலம் கேம்ப் நோக்கி முன்னால் சென்று கொண்டிருந்த கார் வலது பக்கம் திருப்பி போது பின்னால் வந்து கொண்டிருந்த இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், இந்த விபத்து கார் ஓட்டுனரின் கவனக் குறைவால் தான் நடைபெற்றதாக சாட்சியம் அளித்துள்ளார்.

d) மேலும் மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்த மற்றொரு சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.5 சதீஷ் என்பவர் மேற்கண்டவாறு முன்னாள் சென்று கொண்டிருந்த கார் திடீரென சிக்னல் போடாமல் திருப்பி அப்போது பின்னால் வந்து கொண்டிருந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார்.

e) மேலும், இந்த விபத்து சம்பந்தப்பட்ட இரண்டு வாகனங்களையும் மோட்டார்

வாகன ஆய்வாளர் ஆய்வு செய்து அறிக்கைகளை வழங்கியுள்ளார். மேற்படி காயம்பட்ட நபர் பயணம் செய்த இருசக்கர வாகனத்திற்கான அ.சா.ஆ.6 மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையை இந்த நீதிமன்றம் பரிசீலனை செய்யும்போது, அந்த இருசக்கர வாகனத்தின் முன்பகுதியில் சேதங்கள் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபர் ஓட்டிச் சென்ற காரின் அ.சா.ஆ.7 மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையை இந்த நீதிமன்றம் பரிசீலனை செய்யும்போது, அதில் முன் வலது பக்க பம்பரில் சேதமடைந்திருந்ததாகவும், முன் வலது பக்கச் சக்கரத்தின் மேற்பகுதியில் சிராய்ப்பு இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி இரண்டு வாகனங்களிலும் ஏற்பட்டுள்ள சேதங்களைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, கார் முன்னால் சென்று கொண்டிருக்கும்போது வலது பக்கமாகத் திரும்பிய தருணத்தில், பின்னால் வந்து கொண்டிருந்த இருசக்கர வாகனம் காரின் முன் வலது பக்கச் சக்கரம் இருந்த பகுதியில் மோதியிருக்க வாய்ப்புள்ளது என்பது தெளிவாகிறது.

f) ஆனால் இந்த வழக்கில் காயம்பட்ட நபர் தனக்கு பின்னால் இருந்து வந்த கார் வளையும்போது தன் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்று கூறுகிறார். மேற்கண்டவாறு தனக்கு முன்னால் சென்று கொண்டிருந்த கார் சிக்னல் செய்யாமல் வலது பக்கமாக திடீரென கவனக்குறைவாகத் திருப்பியதால் தான் இரு சக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக காயம்பட்ட நபர் குறிப்பிடவில்லை.

g) மேற்படி சம்பவ இடம் தொடர்பாக தயார் செய்யப்பட்ட அ.சா.ஆ.5 மாதிரி வரைபடத்தை இந்த நீதிமன்றம் பரிசீலனை செய்யும் போது அதில் சாலை வளைந்து இருப்பதாக காட்டப்படவில்லை. மேலும் அந்த இடத்தில் பிரிவு சாலைகள் ஏதும் இருப்பதாக காட்டப்படவில்லை.

h) மேலும் நேரில் பார்த்த சாட்சிகள் தெரிவித்தவாறு முன்னால் சென்று கொண்டிருந்த கார் வலது பக்கமாக திரும்பி இந்த விபத்து ஏற்பட்டு இருந்தால், காரின் ஓட்டுனர் வலது பக்கமாக காரை திருப்பி இருக்க வேண்டும். பின்னால் வந்து கொண்டிருந்த இருசக்கர வாகனத்தின் ஓட்டுனர் தனது வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் காரின் வலது பக்கம் சென்று மோதி இருக்க வேண்டும். இந்த சூழ்நிலையில் இந்த விபத்து ஏற்பட மேற்படி இரண்டு ஓட்டுனர்களின் கவனக்குறைவும் இந்த விபத்திற்கு காரணமாக இருந்திருக்க அதிகபட்ச சாத்திய கூறுகள் இருப்பதாக நீதிமன்றம் கருதுகிறது. இதில் யாருடைய கவனக்குறைவு இந்த விபத்திற்கு நேரடி மற்றும் உடனடி காரணமாக இருந்தது என்பதை அந்த விபத்து சம்பந்தப்பட்ட இரண்டு நபர்களை தவிர வேறு யாரும் துல்லியமாக தெரிவிக்க முடியாது என இந்த நீதிமன்றம் கருதுகிறது. இந்த சூழ்நிலையில் காயம்பட்ட நபர் அரசு தரப்பு வழக்கின் படி குற்றஞ்சாட்டப்பட்ட நபர் சிக்னல் செய்யாமல் வலது பக்கம் திடீரென வாகனத்தை திருப்பியதாக சாட்சியம் அளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

i) மேலும் குறிப்பாக இந்த வழக்கில் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.4 சதீஷ் மற்றும் அ.சா.5 சதீஷ் ஆகிய இருவருமே ஏற்கனவே காயம்பட்ட மயில்சாமிக்கு அறிமுகமான நபர்கள் ஆவார்கள். மேலும் இந்த வழக்கில் புலன் விசாரணை அலுவலரான உதவி ஆய்வாளர் அ.சா.7 பரமசிவம் என்பவர் குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டவாறு மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்துக்கு அருகில் குடியிருப்புகள் பல சாலையின் இருபுறமும் இருப்பதாக குறிப்பிட்டுள்ளதை இந்த நீதிமன்றம் கவனத்தில் கொள்கின்றது. ஆனால் அந்த குடியிருப்புகளில் உள்ள ஒரு நபரை கூட இந்த வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளாக காவல்துறையினர் விசாரிக்கவில்லை.

j) மேலும் குறிப்பாக அந்தப் பகுதியைச் சேர்ந்த யாரும் சம்பவத்தை நேரில் பார்த்ததாக இயல்பான தனிப்பட்ட சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை.

k) மேலும் நேரில் பார்த்த சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.4 சதீஷ் தன்னுடைய வீடு சம்பவ இடத்திலிருந்து ஆறு கிலோ மீட்டர் தொலைவில் இருப்பதாகவும் ஆனால் சம்பவசமயத்தில் தானும் தனது நண்பரும் அங்கு நின்று கொண்டு, விபத்தை நேரில் பார்த்ததாக சொல்லி உள்ளார். அவருடன் பேசிக்கொண்டு இருந்த அ.சா.5 சதீஷ் என்பவரும் இந்த வழக்கில் காயம்பட்ட நபர் வசிக்கும் அதே பகுதியை சேர்ந்தவர் என்பதை இந்த நீதிமன்றம் கவனத்தில் கொள்கின்றது. ஆகவே மேற்படி சம்பவத்தை

நேரில் பார்த்த சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்ட இரண்டு நபர்களையும் இந்த வழக்கு சம்பவம் குற்றம் சாட்டப்பட்ட நபரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்பதற்கான போதிய நம்பத் தகுந்த சாட்சிகளாக இந்த நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

l) மேலும் மேற்படி மயில்சாமி என்பவரின் மகன் அ.சா.2 கலைக்கோவன் என்பவர் சம்பவம் பற்றி கேள்விப்பட்டு மேட்டூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த தனது தந்தையை சேலம் காவேரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றது பற்றி சாட்சியம் அளித்துள்ளார். எனவே மேற்படி இந்த விபத்து எவ்வாறு நடைபெற்றது என்பதற்கு அவர் நேரடி சாட்சி அல்ல.

m) மேலும் இந்த சூழ்நிலையில் சம்பவத்தை நேரில் பார்த்ததாக அரசு தரப்பில் உள்ள மற்ற சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை மேலும் சம்பவம் தொடர்பான சிசிடிவி பதிவுகள் எதுவும் இந்த வழக்கில் கிடைக்கப்பெறவில்லை. இந்த சூழ்நிலையில் மேற்படி இந்த விபத்தானது எதிரியின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்பதற்கு மேற்படி இந்த நீதிமன்றம் நம்பி இருக்கும் ஒரே சாட்சியான காயம்பட்ட நபர் அ.சா. 1 மயில்சாமி என்பவரின் சாட்சியம் போதுமானதாக இல்லை என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

n) ஆகவே மேற்கண்ட காரணங்கள் அடிப்படையில் கடந்த 15.01.2023–ஆம் தேதி, பகல் 12.00 மணிக்கு, குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தனது TN 77 E 6080

என்ற பதிவு எண் கொண்ட மாருதி ஆல்டோ காரை வலது பக்க சிக்னல் ஏதும் போடாமல் கவனக்குறைவாகத் திடீரென்று ரோட்டின் வலது பக்கம் திருப்பி, மேற்படி மயில்சாமி என்பவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட காரணமாக இருந்தார் என அரசுதரப்பு போதிய சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் யாதொரு நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்டு நிரூபணம் செய்யவில்லை என இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

o) எனவே மேற்படி காரணங்களின் அடிப்படையில் எழுவினா 2-க்கு அரசு தரப்புக்கு எதிராக இந்த நீதிமன்றம் விடை அளித்துள்ளது.

10. **எழுவினா எண். 2:** மேலும் மேற்படி விபத்தினால் மயில்சாமிக்குத் தலைப்பகுதியில் பல எலும்பு முறிவுகளும், ரத்தக்கட்டுகளும், உடல் முழுவதும் சிராய்ப்புக் காயங்களும் ஏற்படக் காரணமாக இருந்து, **இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவுகள் 279 மற்றும் 338** ஆகியவற்றின் கீழ் தண்டனைக்குரிய குற்றச் செயல்களைச் செய்துள்ளாரா?

a) மேற்படி இந்த விபத்துக்கு குற்றம் சாட்டப்பட்ட நபர் காரணம் இல்லை என்று இந்த நீதிமன்றம் தீர்மானித்துள்ள சூழ்நிலையில் அவருக்கு எதிரான இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 279 மற்றும் 338 ஆகியவற்றின் கீழான குற்றச்சாட்டுகள் நிரூபனம் செய்யப்படவில்லை என இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

b) எனவே மேற்படி காரணங்களின் அடிப்படையில் எழுவினா 2-க்கு அரசு

தரப்புக்கு எதிராக இந்த நீதிமன்றம் விடை அளித்துள்ளது.

**முடிவு**

முடிவாக, இந்த வழக்கின் குற்றஞ்சாட்டப்பட்ட தர்சன் த/பெ சரவணன் என்பவர் **இந்திய தண்டனை சட்டப் பிரிவுகள் 279 மற்றும் 338** ஆகியவற்றின் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து, **குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 255(1) ன் கீழ்** இந்த நீதிமன்றம் விடுதலை செய்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகின்றது. மேலும் இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு பிணையாளர்கள் வழங்கிய பிணைப் பத்திரங்களை இரத்து செய்தும் இந்த நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

இந்த வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் எனது சுருக்கெழுத்திற்கு சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்த்து பிழை திருத்தம் செய்து, சரிபார்க்கப்பட்டு, இன்று **2026ம் வருடம் ஜூலை மாதம் 20–ம் தேதி** திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டு, எனது கையொப்பமும், நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

NAGARAJAN GOPALAKRISHNAN

Digitally signed by NAGARAJAN GOPALAKRISHNAN
Date: 2026.07.20 19:59:15 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2(மு.கூ.பொ),மேட்டூர்.**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

| | | |
|---|---|---|
| அ. சா. 1 | மயில்சாமி | புகார்தாரர் |
| அ. சா. 2 | கலைக்கோவன் | கேள்விப்பட்ட சாட்சி |
| அ. சா. 3 | பிரகாஷ் | பார்வை மகஜர் சாட்சி |
| அ. சா. 4 | சதீஷ், த/பெ.ராஜு | கண்ணுற்ற சாட்சி |
| அ. சா. 5 | சதீஷ், த/பெ.மாரியப்பன் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா. 6 | குணசேகரன் | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.7 | பரமசிவம் | பொறுப்பு அதிகாரி |
| அ.சா.8 | ஈஸ்வரன் | புலனாய்வு அதிகாரி |
| அ.சா.9 | சசிக்குமார் | மருத்துவர் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| அ. சா. ஆ.1 | புகார் வாக்குமூலம் | அ.சா.1 |
| அ. சா. ஆ.2 | பார்வை மகஜர் | அ.சா.3 |
| அ. சா. ஆ.3 | பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து | அ.சா.6 |
| அ. சா. ஆ.4 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.7 |
| அ. சா. ஆ.5 | வரைபடம் | அ.சா.7 |
| அ. சா. ஆ.6 | TN 77 E 6080 பதிவெண் கொண்ட வாகனத்தின் இயந்திர கோளாறு அறிக்கை | அ.சா.8 |

| | | |
|---|---|---|
| அ. சா. ஆ.7 | TN 52 S 3052 பதிவெண் கொண்ட வாகனத்தின் இயந்திர கோளாறு அறிக்கை | அ.சா.8 |
| அ. சா. ஆ.8 | பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.8 |
| அ. சா. ஆ.9 | காயச் சான்றிதழ் | அ.சா.9 |
| அ. சா. ஆ.10 | விபத்து பதிவேடு | அ.சா.9 |

**அரசு தரப்பு சான்று பொருள் :– இல்லை**

**குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தரப்பு சாட்சிகள்:–**இல்லை

**குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தரப்பு சான்றாவணங்கள்:–** இல்லை

**குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தரப்பு சான்று பொருட்கள்:–** இல்லை

NAGARAJAN GOPALAKRISHNAN

Digitally signed by NAGARAJAN GOPALAKRISHNAN
Date: 2026.07.20 19:59:23 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2(மு.கூ.பொ) ,மேட்டூர்.**

**குறிப்பு**

1) தீர்ப்பு பற்றிய தகவல் காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2) இவ்வழக்கு விசாரணையின் போது குற்றஞ்சாட்டப்பட்ட நபர் பிணையில் இருந்தார்.

3) இவ்வழக்கில் சாட்சிகள் மூன்று முறைக்கு மேல் இந்த நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்படவில்லை.

**நகல்:—**

1) மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது.



N. கோபாலகிருஷ்ணன், B.Sc.,B.L., நீதித்துறை நடுவர் எண்.2
(மு.கூ.பொ) , மேட்டூர்
20.07.2026